**செய்தி வெளியீடு எண்:586** **நாள் : 19.11.2014**

## பத்திரிகை செய்தி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 19.11.2014 இன்று காலை 11.00 மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் **திரு ந. சுப்ரமணியன்** அவர்கள் தலைமையில் ஆதிதிராவிடர் நலத்துறை, பழங்குடியினர் நலத்துறை மற்றும் தாட்கோ தொடர்பான, 2014-15 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்த, விரிவான ஆய்வுக் கூட்டம் சென்னை, சேப்பாக்கத்திலுள்ள, **ஆதிதிராவிடர் நலத்துறை கூட்ட அரங்கில்** நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர், **திருமதி கண்ணகி பாக்கியநாதன்,** இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர், **திருமதி ஆ. சுகந்தி**, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் **திரு எஸ். சிவசண்முகராஜா**, இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், **முனைவர் பு.செ. அர்ச்சனா கல்யாணி**, இ.வ.ப., மற்றும் தொடர்புடைய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2014-15 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.1998.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததில் இதுவரை சுமார் ரூ.554.85 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து திட்டங்களையும் விரிவான ஆய்வு செய்து குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் விரைவில் செயல்படுத்த, துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாறும் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல

அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் மாணவ/மாணவியர்கள் முழுநேரம் தங்குவதை உறுதி செய்யவும், உணவுகள் சிறப்பாக வழங்க தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளவும், விடுதிகள் மற்றும் பள்ளிகள் இயங்கும் கட்டடங்களை முறையாக பராமரிக்கவும், தடையில்லாமல் குடிதண்ணீர் கிடைத்திடவும் கழிப்பிடங்களை சுத்தமாக வைத்திடவும், உரிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், நடப்பு கல்வி ஆண்டில், 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு இறுதித் தேர்வில் 100% தேர்ச்சி எய்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, விரிவான பழங்குடியினர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.50.00 கோடிக்கான சிறப்புத் திட்டங்களை விரைவில் செயல்படுத்தவும், தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், 2014-15 ஆம் ஆண்டிற்குரிய சுமார் ரூ.1000.00 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையினை உரிய மாணவ/மாணவியர்களுக்கு விரைவில் கிடைக்கும் வண்ணம், தொடர்புடைய, கல்வி நிறுவனங்கள் மாணவ/மாணவியர்களின் தகவல்களை, Online மூலம் பதிவு செய்ய விரைவு நடவடிக்கை மேற்கொள்வதை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கேட்டுகொள்ளப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**